தொகுதி-12 எண் 3
Vol. 12 No. 3

**Chief Editor**
Dr. M. Sadik Batcha

**Advisory Editor**
Dr. A. Ekambaram

**Editorial Board**
Dr. A. Kaleel Rahuman
Dr. S. Rajendran
Dr. P. Elayapillai
Dr. S. Kalimuthu
Dr. S. Chitra
Dr. Uma Devi
Dr. K. Vasudevan
Dr. Pon. Kathiresan
Dr. A. Shunmughom Pillai
Dr. S. Kalpana
Dr. H. Hidayathullah
Dr. J. Muruganathan
Dr. Kumar
Dr. M.N. Rajesh
Dr. M. Rajasekaran
Dr. Govindaraj
Dr. J. Raja


கலைஞர் 100
1924 - 2023

ஆனி - புரட்டாசி 2055
July - September 2024

7-8 புரட்டாசி 2055
23rd & 24th Sep 2024

ISSN : 2321-984X

Special Issue



இராஜா பப்ளிகேஷன்ஸ்
ஆய்விதழ்

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுக் கலை & மனிதவியல், மொழி மதிப்பாய்வுக் காலாண்டு ஆய்விதழ்)

Raja Publications
Journal of

# Modern Thamizh Research

(A Quarterly International Arts & Humanities, Languages Peer-Reviewed Journal)

Written Languages : Tamil, English

சிறப்பிதழ் : பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2024
தமிழாய்வுத்துறையும்
புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 620 002

# கலைஞரின் படைப்புகளில் பன்முகப்பார்வை

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issues Editor**
முனைவர் அ. ஜெஸிந்தாராணி
இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர்

Published by
**RAJA PUBLICATIONS**
New Address: 21, Race Course Road
#104, Lily Elite Apartment, Khaja Nagar
Tiruchirappalli – 620 020, Tamil Nadu, India
Mobile : +91- 9600535241
Website : rajapublications.com

Raja Publications

41/42

தொகுதி-12 எண் 3 ஆனி - புரட்டாசி 2055 | 7-8 புரட்டாசி 2055 | Special Issue | ISSN : 2321 - 984X
Vol. 12 No. 3 July - September 2024 | 23rd & 24th Sep 2024


| | | | |
|---|---|---|---|
| 1. | கா. வாசுதேவன் | கலைஞரின் 'தென்பாண்டிச் சிங்கம்' புதினத்தில் புலப்பாட்டு உத்திகள் | 1-5 |
| 2. | பெ. இளையாப்பிள்ளை | கலைஞரின் எழுத்துப் புரட்சியும் இன எழுச்சியும் | 6-9 |
| 3. | பா. கௌசிகா | கடிதத்தில் வெளிப்படும் அழகியல் உணர்வு | 10-13 |
| 4. | வெ. இராணி | கலைஞரின் சிறுகதைகளில் மொழிநடை | 14-18 |
| 5. | பொ. தீபா | கலைஞரின் சமூக நலத்திட்டங்கள் - ஓர் ஆய்வு | 19-25 |
| 6. | அ. மகபூபு | கலைஞரின் படைப்பாளுமை | 26-33 |
| 7. | ஜ. பபிதா | கலைஞரின் மொழி நடை | 34-36 |
| 8. | இரா.மூர்த்தி | கலைஞரின் உளஎழுச்சி : "கிழவன் கனவு" சிறுகதையை முன்வைத்து | 37-41 |
| 9. | தா. மேரி மார்டீனா | முத்தமிழ் கலைஞரின் சங்கத் தமிழ் | 42-45 |
| 10. | ஆ. தேவதா | கலைஞரின் தமிழ்த்தொண்டும் பிற தொண்டுகளும் | 46-50 |
| 11. | ஆ. ராஜசேகர் | "கலைஞரின் கவிதை மழை"யில் பெண்ணுரிமைகள் | 51-58 |
| 12. | சு. காவியா | கலைஞரின் வரலாற்று சாதனைகள் | 59-61 |
| 13. | ஆ. கீர்த்தனா | தென்னவன் காதை - மீட்டுருவாக்கம் | 62-65 |
| 14. | கோ. திருப்பதி & | கலைஞரின் குறலோவியம் - பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனும் | 66-69 |
| | எஸ். ரெய்ச்சல் அபிரஞ்சனி | சமதர்ம சிந்தனை நெறி - ஒரு பார்வை | 70-73 |
| 15. | செ. மோகன சுந்தரி | கலைஞர் கண்ட அரசியலும் சமூகப் பார்வையும் | 74-77 |
| 16. | ஜா. அருணா | கலைஞர் - பன்முகப் பார்வை | 78-81 |
| 17. | ஜா.சலேத் | கலைஞர் கவிதைகளில் உவமை உத்திகள் | 82-85 |
| 18. | பா. அப்துல்லா | கலைஞரின் கவிதிறன் | 86-90 |
| 19. | ஜா. பெஞ்சமின் ஆரோன் டைட்டஸ் | கலைஞரின் சிறுகதைகளில் சமூகப் பிரதிபலிப்பும் திருக்குறள் தாக்கமும் | 91-95 |
| 20. | ஞா. எலிசபத் ராணி | கலைஞரின் வாழ்வும் பணியும் | 96-99 |
| 21. | பொ. இரமேஷ் | சமூக நீதி காத்த தலகர்த்தர் கலைஞர் | 100-103 |
| 22. | மு. மு முஸ்தபா | கலைஞரின் கடிதம் - ஓர் ஆய்வு | 104-106 |
| 23. | அ. ஜெஸிந்தா ராணி | காலத்தை வென்றவர் கலைஞர் | 107-110 |
| 24. | அ. அருள் சகாய அனிட்டா | புறநானூற்றுத் தாயில் கலைஞரின் எழுத்தாளுமை | 111-115 |
| 25. | அ. அனுடயானா | கலைஞர் கவிதைகளில் பெரியார் வழி பகுத்தறிவுச் சிந்தனைகள் | 116-119 |
| 26. | ந. இராமர் | கலைஞரின் திரை மொழி | 120-124 |
| 27. | சு. நாகேஸ்வரி | தென்பாண்டிச் சிங்கம் - சமூகப்பார்வை | 125-128 |
| 28. | சிவ. நடராஜன் | குறளும் குறளோவியமும் | 129-131 |
| 29. | வ.மேரி குயின் | கலைஞரின் திரைத்தமிழ் | 132-137 |
| 30. | பா. இமாகுலேட் | கலைஞர் கருணாநிதியின் மொழி ஆளுமை | 138-143 |
| 31. | வெ. பிரேமலதா | கலைஞரின் அரசியல் வாழ்வில் போராட்டங்களும் சாதனைகளும் | 144-147 |
| 32. | ச. கௌசல்யா | கலைஞரின் பன்முகத்தன்மை | 148-151 |
| 33. | யா. லலிதா | கலைஞரின் இலக்கியத் தமிழ் | 152-155 |
| 34. | செ. முத்துசுவேதா | இலக்கிய வரலாற்றில் முத்தமிழறிஞரின் சுவடுகள் | 156-159 |
| 35. | ஆ.ஜோசப் சகாயராஜ் | கலைஞரின் பேச்சு அழகியல் | 160-165 |
| 36. | கோ. யோகலெட்சுமி | தமிழிலக்கிய வளர்ச்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் | 166-169 |
| 37. | தே. அனித்தா மேரி | கலைஞரின் பராசக்தி | 170-176 |
| 38. | ஆ. ஷர்மி | கலைஞரின் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள் | 177-179 |
| 39. | ஜோ. நிர்மலா ஜெயராணி | தமிழை வளர்த்த தலைமகன் கலைஞர் | 180-182 |
| 40. | ப. முரளிகிருஷ்ணன் | கலைஞரின் திரை இசை பாடல்களில் இலக்கிய சிந்தனைகள் | 183-186 |
| 41 | சு. விஜயலெட்சுமி | கலைஞரின் 'குப்பைத்தொட்டி' சிறுகதை உணர்த்தும் சமுதாயம் | 187-189 |
| 42. | க. சுஜாதா | கலைஞரின் கருணை மனம் | 190-192 |
| 43. | அ. ரஞ்சிதா & ப. கிருஷ்ணன் | கலைஞரின் இலக்கியப் பணிகள் | 193-196 |
| 44. | ச. வாசுதேவன் & பெ. இளையாப்பிள்ளை | முத்தமிழறிஞர் கலைஞரின் பொன்மொழிகளில் வாழ்வியல் கூறுகள் | 197-199 |
| 45. | கே. இரா. கமலாமுருகன் | முத்தமிழறிஞரின் கற்பனை ஊற்று | 200-208 |
| 46. | து. ஜெபஸ்டின் | கலைஞர் கடிதத்தில் இலக்கிய மேற்கோள் | 209-211 |
| 47. | ரா. சுபாஷினி | கலைஞரின் தனித்துவச் சிந்தனையும் சிறப்பும் | 212-216 |
| 48. | மு. முஜிபுர் ரகுமான் | காலத்தை வென்ற கலைஞரின் தமிழ் | 217-220 |
| 49. | ஆ. மரிய தனபால் | கவிதைக்கண்ணாடி கொண்டு சமூகத்தைப் பிரதிபலித்த கலைஞர் | 221-224 |
| 50. | மா. ராஜா | கலைக்களஞ்சியத்தின் புதிய பெயர் கலைஞர் | |


Published by : Raja Publications, 21, Race Course Road, #104, Lily Elite Apartment, Khaja Nagar, Tiruchirappalli - 620 020, Tamil Nadu, India. Mobile : +91- 9600535241
Printed : The Printing House, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# கலைஞரின் படைப்பாளுமை

**முனைவர் அ. மகபுபூ**
உதவிப்பேராசிரியை, என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி, 642001,
(பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), தமிழ்நாடு, இந்தியா

**ஆய்வுச்சுருக்கம்**

கலைஞர் முத்தமிழறிஞர் என பல சிறப்புகளைக் கொண்டவர் கலைஞர் முத்துவேல் கருணாநிதி அவர்கள் இயற்பெயர் தட்சிணாமூர்த்தி அவர் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் 1924 சூன் 3-இல் ஏழை இசை வேளாளர் குடும்பத்தில் முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார் கருணாநிதி. இவருக்கு இரு சகோதரிகள் இருந்தனர். தொடக்கக் கல்வியைத் திருக்குவளையில் பெற்றார். பின்னர் திருவாரூரிலிருந்த மாவட்ட நாட்டாண்மைக்கழக உயர்நிலைப் பள்ளியில் பள்ளியிறுதி வகுப்பு வரை பயின்றார். அங்கு இவருக்குத் தமிழாசிரியராக இருந்தவர் சி. இலக்குவனார். பள்ளியிறுதித் தேர்வில் இவர் தேர்ச்சியடையவில்லை. ஆனாலும் கருணாநிதி, தமது பள்ளிப் பருவத்தில் நாடகம், கவிதை, இலக்கியம் ஆகியவற்றில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்.

தமது வளரிளம் பருவத்தில், வட்டார மாணவர்கள் சிலரின் உதவியுடன் திருவாரூர் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் என்னும் இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பை 7-7-1944 அன்று உருவாக்கினார். அவரே அதன் தலைவராகவும் அமைச்சராக கே.வெங்கிடாசல என்பவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதன்மூலம் இளைஞர்கள் தங்கள் பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் வளர்த்துக்கொள்ள அவ்வமைப்பு உதவியது. அதன் வழியாக மாணவநேசன் என்னும் கையெழுத்துப் பத்திரிக்கையை வெளியிட்டு இளைஞர்களைத் திரட்டினார். இவ்வமைப்பு சில காலத்துக்குப் பின், மாநில அளவிலான ''அனைத்து மாணவர்களின் கழகம்'' என்ற அமைப்பாக உருப்பெற்றது.

கருணாநிதி, மற்ற உறுப்பினர்களுடனான சமூக பணியில் மாணவர் சமூகத்தையும் ஈடுபடுத்தினார் இளம் வயதில் பல்வேறு தமிழ் தலைவர்களின் எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டவர்; கருணாநிதி இவரால் அன்று துவங்கப்பட்ட மாணவநேசன் என்னும் இதழ்; தற்போது முரசொலி என்னும் நாளிதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பார்கள் அதற்கினங்க அரசியல்; சமூகம் கலை, மற்றும் இலக்கியம் என பல துறையிலும் தனது ஆளுமையைச் செலுத்தியவர் கலைஞர் அவரின் படைப்பாளுமையை எடுத்துக் கூறுவதாகக் இக்கட்டுரை அமைகிறது.

**கலைச்சொற்கள் :** கட்டுரை, கவிதை, நாடகம், புதினம், நாவல், திரைப்படம், சமூகம், அரசியல்.

## முன்னுரை

கலைஞர் என்று அழைக்கப்படுவதற்கு முற்றிலும் பொருத்தமானவர் கருணாநிதி. அவர் தடம் பதிக்காத கலை வடிவங்களே இல்லை என்று சொல்லாம். கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், நாவல், வரலாறு என எல்லா வடிவங்களிலும் முத்திரை பதித்தவர் அவர். 15 வயதில் எழுதிய 'பழனியப்பன்' என்கிற நாடகமே கலைஞரின் முதல் நாடகம். திருவாரூரில் அந்த நாடகத்தை அவர் அரங்கேற்றம் செய்தார். பின்னர் அது 'நச்சுக்கோப்பை' என்கிற தலைப்பில் தமிழகம் எங்கும் திராவிடர் கழக மேடைகளில் நடத்தப்பட்டது. மொத்தம் 17 நாடகங்களை அவர் எழுதியிருக்கிறார். ஒவ்வொரு நாடகத்தையும் திரைக்கதையின் வடிவத்தில் அவர் எழுதியிருந்தார். பின்னாட்களில் திரை வடிவத்தின் மீது அவர் கொண்டிருந்த ஆளுமைக்கு அடித்தளமாக அமைந்தன.

திரைப்பட மொழியின் வலிமையை இளம் வயதிலேயே அவர் நன்கு உணர்ந்திருந்தார். அபரிமித படைப்பாற்றல், அபார சொல்வீச்சு, நிகரற்ற மொழி ஆளுமை ஆகியவற்றின் காரணமாக, 20 வயதுக்கு உள்ளாகவே திரைத்துறையில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டார். 'அபிமன்யு' என்கிற படத்துக்கு வசனம் எழுதியதன் மூலம் திரைத்துறைக்குள் நுழைந்த அவர், அதன் பின் அடைந்த உயரம் வேறு யாராலும் எட்ட முடியாத ஒன்றாக இருந்தது. இருக்கிறது. உலக அளவில் எடுத்துக்கொண்டாலும், அவர் அளவுக்கு எந்த வசனகர்த்தாவும் கொண்டாடப்படவில்லை. அவருடைய வசனங்கள் அளவுக்கு வேறு எவருடைய வசனங்களும் போற்றப்படவில்லை; சமூகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தவில்லை. திரைப்பட வசனத்திற்கு ஒரு மாபெரும் இலக்கிய மரியாதையையும் பெற்றுத் தந்தவர் கலைஞர். கதை, திரைக்கதை, வசனம், பாடல், தயாரிப்பு எனத் திரைத்துறையின் அனைத்துத் தளங்களிலும் அவர் தன் செம்மையான பங்களிப்பை அளித்திருக்கிறார். அவருடைய படைப்புகளில் தமிழுணர்ச்சி, சமுதாயக் கண்ணோட்டம், சமூக நீதி போன்றவை எப்போதும் நிறைந்திருக்கும். இவரின் பேனா திரைத்துறையை மட்டுமா? அலங்கரித்தது இல்லை இலக்கியத்தையும் அலங்கரித்தது. பதினான்கு வயதில் கவிதையில் துவங்கி கட்டுரையில் கிளர்ந்து, கதை, நாவல், புதினம், சமூகம்; அரசியல் என பரவி பலமுகங்களாக விரிந்தன. அவற்றின் சிறுகுறிப்பை போன்றது எனது கட்டுரை.

**அரசியல், வாழ்க்கை**

கல்லக்குடி போராட்டம் நீதிக்கட்சியின் தூணாகக் கருதப்பட்ட பேச்சாளர் அழகிரிசாமியின் பேச்சால் ஈர்க்கப்பட்ட கருணாநிதி, தனது 14-ஆவது அகவையில், அரசியல், சமூக இயக்கங்களில் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். தமிழ் அரசியலில் களமிறங்குவதற்கு உதவிய முதல் பிரதான எதிர்ப்பு, கல்லக்குடி ஆர்ப்பாட்டத்தில் (1953) ஈடுபட்டது ஆகும். இந்தத் தொழிற்துறை நகரத்தின் அசல் பெயர் கல்லக்குடி. இது வட இந்தியாவில் இருந்து ஒரு சிமெண்ட் ஆலை ஒன்றை உருவாக்கிய சிம்மோகிராம் பிறகு டால்மியாபுரம் என மாற்றப்பட்டது. தி.மு.க. அந்தப் பெயரைக் கல்லக்குடி என மீண்டும் மாற்ற வேண்டுமென விரும்பியது. கருணாநிதி மற்றும் அவருடைய தோழர்கள் இரயில் நிலையத்திலிருந்த டால்மியாபுரம் என்ற பெயரை அழித்தனர். மேலும் இரயில் மறியலிலும் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் இருவர் இறந்தனர், கருணாநிதி கைது செய்யப்பட்டார்.

**இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம்**

1957-இல் நடைபெற்ற திமுக இந்தி எதிர்ப்பு மாநாட்டில் தமிழ் நாட்டில் நடுவண் அரசால் இந்தி, திணிக்கப்படுவதை வன்மையாக எதிர்ப்பதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அக்டோபர் 13, 1957 அன்றைய நாளை இந்தி எதிர்ப்பு நாளாக பெருந்திரளான மக்களுடன் அமைதியான முறையில் கடைப்பிடிப்பது என முடிவானது. இப்போராட்டத்துக்குத் தலைமை தாங்கிய கருணாநிதி நடுவண் அரசின் இந்தித் திணிப்பை எதிர்த்து, "மொழிப்போராட்டம்.. எங்கள் பண்பாட்டைப் பாதுகாக்க, இ∴து எமது மக்களின் தன்மானம் மற்றும் எங்களது கட்சியின் அரசியல் கொள்கை.. மேலும் இந்தி என்பது உணவு விடுதியிலிருந்து எடுத்துச் செல்லும் உணவு (எடுப்பு சாப்பாடு), ஆங்கிலம் என்பது ஒருவர் சொல்ல அதன்படி சமைக்கப்பட்ட உணவு, தமிழ் என்பது குடும்பத் தேவையறிந்து, விருப்பமறிந்து, ஊட்டமளிக்கும் தாயிடமிருந்து பெறப்பட்ட உணவு" என்று முழக்கமிட்டார்.

அக்டோபர், 1963, இந்தி எதிர்ப்பு மாநாடு சென்னையில் (மதராஸ்) கூட்டப்பட்டது. இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் நடுவண் அரசின் புரிந்து கொள்ளாமையை உணர்த்தும் விதமாக இந்திய அரசியலமைப்பு தேசிய மொழிகள் சட்ட எரிப்பு போராட்டம் நடத்துவதென மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. நவம்பர் 16 அன்று அண்ணாதுரையும், நவம்பர் 19 அன்று கருணாநிதியும் கைது செய்யப்பட்டு 25 நவம்பர் அன்று உயர் நீதிமன்ற ஆணையால் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறாக துவங்கிய அரசில் வாழ்க்கையில் முத்துவேல் கருணாநிதி இந்திய அரசியலில் தமிழக முதல்வராக ஐந்துமுறை பதவிவகித்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும் 1969 முதல் 2018 வரை பதவி வகித்துள்ளார். 1969,1971,1989,1996,2006 என ஐந்து முறை தமிழக முதலமைச்சராகப் பணியாற்றினார்.

### கலைஞரின் படைப்புகளில் கவிதைகள்

கலைஞரின் கவிதைகளைப் பற்றி மு.மேத்தா கூறுகையில் அவரது கவிதைகள் மரபும் அல்ல புதியதும் அல்ல "புதுமரபுக் கவிதைகள்" என்கிறார். (kalaignar.dmk.in) ஏனெனில் அவரது கவிதைகளில் யாப்பு, எதுகை, மோனை என மரபுக் கவிதைகள் போன்று அனைத்து இலக்கண நயமும் பொருந்தி இருக்கும். அதேசமயம் புதுமைகளைப் புகுத்த மரபை தனக்கு ஏற்ப வளைத்துக் கொள்ளவும் அவர் தயங்கியதில்லை. 1938 ஆம் ஆண்டு தனது 14 வயதில் "ஓடி வந்த இந்திப் பெண்ணே நீ தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே" எனத் தொடங்கும் பாடல் வரிகளுடன் தனது கவிதைப் பயணத்தைத் தொடங்கி தனது இறுதிக்காலம் வரை தமிழ் உலகிற்கு எண்ணற்ற கவிதைகளை வழங்கியுள்ளார். கலைஞர் பற்றி வைரமுத்து கூறும் பொழுது "தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு முன்னுதாரணம் இல்லாத முதல் உதாரணம் முத்தமிழறிஞர் கலைஞர்" என்பார். (kalaignar.dmk.in) கவிஞர் இளையபாரதி "உயிரோடு இருப்பது வேறு, உயிர்ப்போடு இருப்பது வேறு. தன் ஒவ்வொரு கணத்தையும் உயிர்ப்போடு வைத்திருப்பவர் கலைஞர் அதற்கான ரகசியம் அவரது கவித்துவம்" என்று கலைஞரின் கவி மனத்தைப்பற்றி சொல்கிறார். (kalaignar.dmk.in) அவரது முதல் கவிதைத் தொகுப்பின் பெயரே 'கவிதையல்ல' என்பதுதான் இதுவே அவரது கவித்துவத்திற்கு ஒரு சான்று. கலைஞரின் 'கவிதை மழை' என்னும் கவிதைத் தொகுப்பு நூல் 1707 பக்கங்களைக் கொண்டது. 1988 முதல் 2004 வரை 68 ஆண்டுகள் கலைஞர் எழுதிய கவிதைகளை 210 தலைப்புகளில் இந்த நூலில் இடம்பெற்றுள்ளது. அண்ணாவிடம் இதயத்தை இரவலாக கேட்ட அவலச் சுவையிருந்த இரங்கல் கவிதைகள், விளிம்பு நிலை மனிதர்களைப் பற்றிய கவிதைகள், இந்திரசித், வாலி போன்ற மாற்று கதாநாயகர்களைப் பற்றிய புதிய பரிணாமத்தை வழங்கும் கவிதைகள், கவியரங்கில் பல்வேறு தலைப்புகளில் பாடிய கவிதைகள், பகுத்தறிவை, மொழி உணர்வை ஊட்டும் புரட்சிகர கவிதைகள் என கலைஞரின் கவி வாழ்வு பல்வேறு சுவைகளையும், உணர்வுகளையும் தமிழ்ச் சமூகத்திற்கு ஊட்டியுள்ளது.

### கட்டுரைகள்

கலைஞரின் முதல் கட்டுரை அதன் தலைப்பு 'இளமைப்பலி' பெண் விடுதலை, கைம்பெண் மறுமணம், ஜாதி மறுப்பு, பகுத்தறிவு, புராண எதிர்ப்பு – இத்தனை செய்திகளையும் ஒரே ஒரு கட்டுரையில் எழுத முடியுமா? அதுவும் 500-க்கும் குறைவான சொற்களைக் கொண்ட ஒரு சிறிய கட்டுரையில்? முடியும் என்றால் அதற்கான விடைதான் கலைஞரின் படைப்பு. அவரின் முதல் படைப்பே முத்தான படைப்பு பேரறிஞர் அண்ணா நடத்திய திராவிட நாடு இதழில் 26.04.1942-இல் வெளியானது. இக்கட்டுரையை எழுதியபோது கலைஞரின் வயது 18. பதினாறு வயதே நிரம்பிய சிறுமிக்கு ஒரு முதியவனை மணம் முடிக்கிறார்கள். அவள் காதலித்த இளைஞனை ஜாதியின் காரணத்தால் மணம் முடிக்க மறுக்கிறார்கள். அந்தோ பரிதாபம்! அம்முதியவர் ஆண்டொன்று தாண்டவில்லை. முதுமையால் இறக்கிறார். அந்தக் கைம்பெண்ணின் கவலையை எழுத்தோவியமாக வடிக்கிறார் கலைஞர். அவளுக்கு மறுமணம் செய்வதல்லவா நியாயம் என்கிறார் கலைஞரின் கைம்பெண்ணின் துயரத்தைக் கலைஞரின் வார்த்தைகளிலேயே காணலாம்.

கடவுளின் பேரால் மனிதரை ஏமாற்றி வாழும் கூட்டத்தினரின் வைதீக போதனையால் அவள் நல்லுடை அணியாவண்ணம் தடுத்தது. விதவை என்ற பட்டம் விரும்பிக் கொடுத்தது. துயரக் கணையைத் தொடுத்தது. என்னென்றியம்புவது பெற்றோரின் மடமையை? யாதென்றுரைப்பது கைம்மைக் கொடுமையை? மறுமணந்தான்

உண்டா மங்கை நல்லாள் இன்பமுற?" "மனைவி இறந்தால் மறுதாரம் மணம் புரியும் நீ மங்கையரின் மறுமணத்தை வெறுப்பது நன்றா?" என்று ஆண்களை நோக்கிச் சமத்துவக் கேள்வி கேட்கிறார் சமூகநீதி நாயகர் கலைஞர். இந்தக் கட்டுரை வெளியான பின்பு, அண்ணா அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு, கலைஞருக்குக் கிடைத்தது. "எழுதாதே" என்கிறார் அண்ணா, கலைஞரிடம். இளைஞர்கள் படித்து முடித்துவிட்டு அரசியலுக்கு வர வேண்டும் என்பது அண்ணாவின் அக்கறை. அவர்களது அரசியல் வேட்கையினால், படிப்பு பாழாகி விடக் கூடாது என்று அண்ணா எண்ணினார் அவர் எண்ணியது போன்றே கலைஞரும் சிறு வயதிலேயே அரசியலுக்கும் வந்துவிட்டார்.

**புதினங்கள்**

கலை என்பது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான கருவியாக இருக்க வேண்டுமே ஒழிய வாழ்க்கைக்கு பயன்படாத சொற்குவியல்களாக, பொழுதுபோக்காக மட்டுமே அமைந்துவிடக் கூடாது என்று கருதுபவர் கலைஞர். அதன் அடிப்படையிலேயே அவர் தமிழ் உலகிற்கு வழங்கிய 16 புதினங்களும் பகுத்தறிவையும் வளர்ப்பதாக, சாதி மத பேதங்களின் ஒழிப்பை வலியுறுத்துவதாக, போலித்தனமான வாழ்க்கையை சாடுவதாக, தமிழரின் பழம் பெருமைகளை போற்றுவதாக, மண வாழ்க்கையில் ஆண் பெண் சமத்துவத்தை குறிப்பதாக அமைந்திருந்தன.

அவரது முதல் நாவலான 'புதையல்' மூடத்தனத்தில் முக்கிய மனிதர்கள் புதையலை அடைவதற்காக செய்யும் மிருகத்தனமான உயிர் பலிகள், போலிச்சாமியார்களின் கயமை போன்றவற்றை எடுத்துக்காட்டி பகுத்தறிவது வெளிச்சத்தை பாய்ச்சுவதாக அமைந்திருந்தது. 'ஒரே ரத்தம்' என்ற புதினத்தில் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்களின் துன்பங்களையும், அந்த மக்கள் தங்கள் தாழ்வு மனப்பான்மையிலிருந்து விடுபட வேண்டிய அவசியத்தையும் உணர்த்துகிறார். மிக முக்கியமாக கலப்புமணம் பெருகவேண்டும் என்ற கருத்தையும் இந்த புதினத்தில் வலியுறுத்தியிருப்பார். கலைஞருக்கு தமிழ்ப் பல்கலைகழகத்தின் படைப்பிலக்கியம் பரிசை பெற்றுக் கொடுத்த புதினம் தென்பாண்டிச் சிங்கம். அழகு நடையில் எழுதப்பட்ட இந்த நாவல் வரலாற்று நிகழ்வுகளை புள்ளிவிவரங்களோடு எடுத்துரைப்பதோடு நில்லாமல், தற்கால சூழலுடன் அவற்றைப் பொருத்தி சமூகத்தை விழிப்படைய செய்வதாக அமைந்திருந்தது. தனது ஒரு 'மரம் பூத்தது' என்னும் நாவலின் மூலம் விதவை மறுமணத்தை பற்றி சமுதாயத்திற்கு பக்குவமாக புரிய வைத்தார் கலைஞர்.

**கடித இலக்கியங்கள்**

கதைகளிலும் இதழ்களிலும் நூல்களிலும் கடித வடிவத்தை ஒரு உத்தியாக கொண்டு கட்டுரை வரைவதை புனைவுக்கடிதம் எனலாம். தமிழில் இந்த முயற்சியை முதலில் தொடங்கியவர் "மு.வ" அவரைத் தொடர்ந்து அண்ணா எனது "தம்பிக்குக் கடிதம்" மூலம் இதனை மிக அழகாக கையாண்டார். அண்ணாவை தொடர்ந்து எழுதத் தொடங்கிய கலைஞர் கடிதம் இலக்கியத்தை ஒரு சொல்லின் மூலம் மரபு மாறாமல் இறுதிவரை எழுதினர். பொதுவாக கட்சித் தொண்டர்களுக்கு உடன்பிறப்பே என்ற விளிப்புடன் கடிதத்தை துவங்குவார். அதுபோக பழைய நண்பனே, மாஜி நண்பா என்ற விளிப்புடனும் சில கடிதங்கள் குறிப்பிட்ட நபர்களுக்கு எழுதியிருப்பார்.

கலைஞரின் கடிதங்கள் அரசியல் செய்திகளோடு நாட்டு நிகழ்வுகளையும் பொருளாதார, கலாச்சார, சமுதாய துறைகளில் போக்குகளையும் ஆய்வு செய்வதாக அமைந்திருக்கும். அவரது கடிதங்களில் முக்கிய கூறுகளாக சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, மொழி உணர்வு ஆகியவையுடன் திருக்குறள் மற்றும் சங்க இலக்கியத்தின் செல்வாக்கும் மிகுந்திருக்கும். படிப்பவரின் உள்ளத்தில் எளிமையாக தான் கூற நினைக்கும் கருத்துக்கள் சென்று சேரும் வகையில் "குட்டிக்கதைகள், உருவகக்கதைகள், உவமை உருவகம், பண்பாட்டுத் தலைவர்கள் வரலாற்று நாயகர்கள்,

இலக்கியவாதிகள், போன்றோரின் வாழ்க்கை நிகழ்வுகள்" போன்றவற்றை தம் கருத்துக்களை விளக்குவதற்கு உத்தியாக கையாண்டார்.

கடிதங்களில் அவரது மொழி நடை அலாதியானது அவை தன் தொண்டர்களை போராட அழைக்கும் பொழுது "வீரத்தின் திருவுருவே! மான மரபின் குலவிளக்கே! என உணர்வுபூர்வமாகவும்", அதே சமயம் கட்டளையிடும் பொழுது உள்ளம் கொள்ளத் தக்கதாகவும், சில சமயங்களில் அணுக்கமான உரையாடல் வடிவிலும் அமைந்திருக்கும்.

### நெஞ்சுக்கு நீதி

உடன்பிறப்புகளுக்கு கலைஞர் எழுதிய கடிதங்கள் தொகுக்கப்பட்டு, 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. 'நெஞ்சுக்கு நீதி' என்ற தலைப்பில், தனது வாழ்க்கை நிகழ்வுகளை 6 தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறார் தலைவர் கலைஞர்.

### கலைஞரின் நாடகங்கள்

தமிழ் சொல்லுக்கு அளப்பரிய ஆற்றல் இருக்கிறது என்பதற்குகலைஞரின் நாடகங்கள் ஒரு சாட்சி. நாடகங்களில் தான் சொல்ல விரும்பும் ஆழமான கருத்துக்களை எளிதில் பொது மக்களை கவரும் மேடையில் அமைப்பதில் அவர் வித்தகர். சமூக சீர்திருத்தம், மூடநம்பிக்கை ஒழிப்பு, அரசியல் செய்திகள் போன்றவை அவரது நாடகங்களில் பின்னிப் பிணைந்திருக்கும். அடித்தள மக்களின் அவலக் குரல் அவரின் நாடகத்தில் எதிரொலித்தன இவையே பிற்காலத்தில் அவரது அரசியல் நோக்கங்களுக்கு துணை செய்தன. நாடகத்தைப் பற்றி கலைஞர் கூறுகையில் "நாடக இலக்கியம் போல விரைந்து மனமாற்றம் உண்டாக்கக் கூடிய ஆற்றல் வேறு எதற்கும் இல்லை அதனால்தான் அரசியல் கருத்துக்களை பண்பாடு கெடாமல் தரம் தாழாமல் அள்ளி தெளிப்பதற்கு நாடக இலக்கியத்தை கருவியாக பயன்படுத்திக் கொண்டேன்" என்றார். 'தூக்குமேடை', 'மகான் பெற்ற மகான்' போன்றவை அவரது சமூக சீர்திருத்த நாடகங்களுக்கு எடுத்துக்காட்[...] அதேபோல் 'நச்சுக்கோப்பை', 'சாக்கிர[...] போன்ற நாடகங்கள் மூடநம்பிக்கை எதி[...] பிரச்சாரம் செய்தன. "குடிசைதான் ஒரு பு[...] கூரிய வேல் வாள் வரிசையாய் வைத்திருக்[...] எனத் தொடங்கும் புகழ்மிக்க வசனம் இடம்பெ[...] நாடகம் 'பரப்பிரம்மம்'. புறநானூற்றுப் பாட[...] அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இ[...] நாடகத்தின் மூலம் வசூலான தொகையை தஞ்[...] புயலில் பாதிக்கப்பட்ட வர்களுக்கு கலை[...] வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதனைத் தொடர்ந்து 'சிலப்பதிகாரம்[...] 'சேரன் செங்குட்டுவன்', ராமாயணத்தை கிண்ட[...] செய்து எழுதிய 'பரதாயன' போன்ற இலக்கி[...] நாடகங்கள் பலவற்றை கலைஞர் தனக்கே உரி[...] தனித்தன்மையுடன் எழுதினார். கலைஞரி[...] 'திருவாளர் தேசியம்பிள்ள' போன்ற நாடக[...] தேர்தல் பிரச்சாரத்திற்காக, காங்கிரஸ் கட்சியை[...] நையாண்டியுடன் விமர்சிப்பதாக அமைந்திருக்கும்[...] திமுகவிற்கு உதயசூரியன் சின்னமாக கிடைத்த பிறகு[...] அதனை பிரபலப்படுத்துவதற்காக 'உதயசூரியன்[...] என்ற பெயரிலேயே நாடகம் ஒன்றை இயற்றினார்[...] கருணாநிதி. இப்படி நாடகத்தை சமூக மாற்றம், பகுத்தறிவு, போன்றவற்றுடன் தேர்தல் அரசியல் பிரச்சாரத்திற்கான கருவியாகவும் கலைஞர் திறமையுடன் கையாண்டார்.

கலைஞர், முதன்முதலில் எழுதி அரங்கேற்றிய நாடகம், 'பழனியப்பன்'. இது, திருவாரூர் பேபி டாக்கீஸில், 1944-ம் ஆண்டு அரங்கேற்றப்பட்டது. பின்னர் இந்த நாடகம் 'நச்சுக்கோப்பை' என்ற பெயரில், தமிழகம் முழுவதும் அறங்கேற்றம் செய்யப்பட்டது. 'தூக்குமேடை', 'பரப்பிரம்மம்', 'சிலப்பதிகாரம்', 'மணிமகுடம்', 'ஒரே ரத்தம்', 'காகிதப்பூ', 'நானே அறிவாளி', 'வெள்ளிக்கிழமை', 'உதயசூரியன்', 'திருவாளர் தேசியம்பிள்ளை', 'அனார்கலி', 'சாம்ராட் அசோகன்', 'சேரன் செங்குட்டுவன்','நாடகக் காப்பியம்', 'பரதாயணம்' உட்பட 21 நாடகங்களை எழுதியுள்ளார் கலைஞர். 'பராசக்தி' திரைப்படம் வெளியானபோது, அந்தப் படத்தை கிண்டல் செய்து ஓர் இதழில்,

பரப்பிரம்மம் என்ற பெயரில் கார்ட்டூன் வெளியிடப்பட்டது. இதையடுத்து, 'பரப்பிரம்மம்' என்ற பெயரில் நாடகம் எழுதிய கலைஞர், அதை மாநிலம் முழுவதும் அறங்கேற்றம் செய்தார். 1957-ம் ஆண்டு, தி.மு.கவுக்குக் கிடைத்த உதயசூரியன் சின்னத்தைப் பிரபலபடுத்துவதற்காக, 'உதயசூரியன்' என்ற நாடகத்தை எழுதினார்.

### திரைப்படங்கள்

திராவிட இயக்கம் வலுப்பெறத் தொடங்கிய பிறகு மக்களை சென்றடையக் கூடிய அனைத்து கருவிகளையும் மிக சாதுரியமாகக் கையாண்டது. அப்படி ஒரு வலுவான கருவிதான் திரைப்படம். அத்தகைய திரைத்துறையில் கதாசிரியராகவும், வசனகர்த்தாவாகவும், பாடலாசிரியராகவும் மற்றும் தயாரிப்பாளராகவும் சிறந்து விளங்கியவர் கலைஞர் கருணாநிதி. குறிப்பாக அதுவரை மக்களால் திரைப் படத்தில் யார் நடிக்கிறார்கள்? யார் இயக்குகிறார்கள்? என்றெல்லாம் பேசப்பட்ட காலம் போய், யார் வசனம் எழுதியிருக்கிறார்கள்? என்று கேட்க வைத்து திரைப்பட வசனத்திற்கு ஒரு மாபெரும் இலக்கிய மரியாதையையும் பெற்றுத் தந்தவர் கலைஞர். திரைத்துறையில் கலைஞர் தனக்கென ஒரு இலக்கியம் கலந்த தனி நடையை உருவாக்கினார்.

### கலைஞர் கதை வசனம் எழுதிய திரைப்படங்கள்

பகுத்தறிவு பேசுபவை-(பராசக்தி, ராஜகுமாரி, மலைக்கள்ளன்)

அரசியல் பேசுபவை-(புதுமைப்பித்தன், குறவஞ்சி, அரசிளங்குமரி வண்டிக்காரன் மகன்)

சமூக முன்னேற்றம் பற்றி பேசுபவை-(மருதநாட்டு இளவரசி, பணம், நாம், திரும்பிப் பார்)

பெண்ணுரிமை பற்றி-(மணமகள், ராஜா ராணி, இருவர் உள்ளம், பாசப்பறவைகள்)

இலக்கியம் பற்றிப் பேசுபவை-(அபிமன்யு பூம்புகார், உளியின் ஓசை)

என வகைப்படுத்தலாம்.

கதை வசனம் மட்டும் அல்லாது கலைஞர் பல திரையிசைப் பாடல்களையும் எழுதியுள்ளார் அவற்றில் தமிழுணர்ச்சி, சமுதாயக் கண்ணோட்டம், திராவிட இயக்கத்தின் லட்சியங்கள் போன்றவை மிளிர்வதைக் காணலாம். 1947-ம் ஆண்டு வெளியான 'ராஜகுமாரி' திரைப்படம்தான், கலைஞர் முதன் முதலில் வசனம் எழுதிய திரைப்படம். எம்.ஜி.ஆர் நாயகன் வேடம் ஏற்று நடித்த முதல் திரைப்படமும் 'ராஜகுமாரி' தான். 1950-ம் ஆண்டு, சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் 500 ரூபாய் ஊதியத்தில் எழுத்தாளராக பணியில் சேர்ந்த கலைஞர், அங்கு சில திரைப்படங்களில் பணியாற்றினார்.

1952-ல், கலைஞர் கதை, வசனம் எழுதி வெளியான 'பராசக்தி' திரைப்படம், தமிழ்த் திரையுலக வரலாற்றில் மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. தமிழகத்தின் புகழ்பெற்ற நடிகராக சிவாஜி கணேசனை அறிமுகப்படுத்தியதும் இந்தப் படம்தான்.'பராசக்தி' திரைப்படத்தில் இடம்பெற்ற சமூக நோக்கில் அமைந்த கூர்மையான வசனங்கள், திரைப்படத் துறையை புதிய பாதைக்கு அழைத்துச் சென்றது. 1950-களிலில் இருந்து 1970-கள்வரை, தமிழ்த் திரையுலகில் கோலோச்சிய எம்.ஜி.ஆர், சிவாஜி ஆகிய இருவருக்கும் மிகப் பெரிய வெற்றிப் படங்களை அளித்தவரும் தலைவர் கலைஞர்தான். சிவாஜிக்கு 'பராசக்தி, மனோகரா'வும், எம்.ஜி.ஆருக்கு 'மந்திரி குமாரி', 'மலைக்கள்ளன்' ஆகியவையும் திருப்புமுனையாக அமைந்தன. கலைஞர் கதை-வசனத்தில், மொத்தம் 9 திரைப்படங்களில் எம்.ஜி.ஆர். நடித்துள்ளார். ஆரம்பகாலங்களில், கலைஞரை 'ஆண்டவரே' என்று அழைத்து வந்தார் எம்.ஜி.ஆர். தொலைக்காட்சித் தொடராக வெளியான கலைஞரின் நாவல் 'தென்பாண்டிச்சிங்கம்', 'இராமானுஜர்' – மதத்தில் புரட்சி செய்த மகான.; கலைஞர் 92 வயதில் வசனகர்த்தவாக் கடைசியாக வசனம் எழுதிய தொடர், கலைஞர் தொலைக்காட்சியில் வெளியானது. குறிப்பிடத்தக்கது.

### குறளோவியம்

அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் எளிய நடையில், 'குறளோவியம்' என்ற தலைப்பில், திருக்குறளுக்கு கலைஞர் எழுதியுள்ள விளக்க உரை, கலைஞர் அவர்களின் முதன்மையான இலக்கியப் பங்களிப்பாகும். திருக்குறளுக்கு உரை எழுதிய பலரும் பெண்ணடிமைத் தனத்தோடு பொருள் விளக்கம் கூறியுள்ள நிலையில், பெண்களை உயர்வாகக் கூறி உரை எழுதியவர் கலைஞர் மட்டுமே.

### 178 நூல்கள்

சங்கத்தமிழ்', 'தொல்காப்பிய உரை', 'இனியவை இருபது', 'மேடையிலே வீசிய மெல்லியப் பூங்காற்று', 'மலரும் நினைவுகள்', 'கலைஞரின் கவிதை மழை', 'இளைய சமுதாயம் எழுகவே' உட்பட 178 நூல்களை கலைஞர் எழுதியிருக்கிறார்.

### முடிவுரை

கலைஞர் அவர்கள் 75 திரைப்படங்களுக்குக் கதை, திரைக்கதை, வசனம் எழுதியிருக்கிறார். 15 15 நாவல்களையும் 20 நாடகங்களையும் 15 சிறுகதைகளையும் 210 கவிதைகளையும் படைத்துள்ளார். மேலும் "நண்பனுக்கு", "உடன்பிறப்பே" என்னும் தலைப்புகளில் 7000-இக்கும் மேற்பட்ட மடல்களை எழுதியிருக்கிறார். கரிகாலன் என்னும் பெயரில் கேள்வி-பதில் எழுதியிருக்கிறார். இவை, தவிர தாம் பணியாற்றிய இதழ்களில் எண்ணற்ற தலையங்கங்களை எழுதியிருக்கிறார். இவரின் படைப்புகள் 178 நூல்களாக வெளிவந்திருக்கின்றன. இவ்வாறாக தனது பள்ளிப்பருவத்தில் கையேழுத்து பிரதியாக துவங்கி 92 வயதில் ஸ்ரீ இராமனுஜராகவும் அவரின் எழுத்து சேவை தொடர்ந்தது. கலைஞரின் இலக்கியத்திற்கு ஓய்வு என்பது ஒன்று என்றும் இல்லை என்பதற்கினங்க வாழ்ந்து மறைந்தவர் கலைஞர் அவர்கள். கலைஞரின் பேனாவின் ஆளுமை அனைத்து கலைகளையும் ஆண்டது. அந்த ஆளுமையை என் கட்டுரையின் சிலபக்கங்களில் முழுவதுமாக கூறிவிட முடியாது சிறுதுள்ளி பெருவெள்ளம் என்பார்கள் கலைஞரின் படைப்பு பெரும்சமுத்திரம். அதில் என்கட்டுரை ஒருசிறுதுளி. கலைஞர் அவர்கள் தமிழிற்காகவும் தமிழ்மக்களுக்காகவும் தனது வாழ்க்கையை அர்பணித்தவர் இவர். கூறுவது போன்று "நீங்கள் என்னை கடலில் தூக்கி போட்டாலும் நான் கட்டுமரமாகத்தான் மிதப்பேன் உங்களை கவிழ்த்து விடமாட்டேன்" என்றவர் உண்மையில் தமிழக மக்களின் கட்டுமரமாக இருந்து கரையெத்தியவர் அவரின் பணியை இன்று அவரின் மகன் நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சீறும்சிறப்புமாக தொடர்கிறார். மேலும் கலைஞரின் அனைத்து நூல்களையும் உரிமைத்தொகை ஏதுமின்றி நாட்டுடைமையாக்கப்படுவதாக, நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 22 ஆகஸ்டு 2024 அன்று அறிவித்துள்ளார். (ஒன் இந்தியா 23 ஆகஸ்டு 2024;) இத்தகைய சிறப்புகளையுடைய கலைஞரின் ஆளுமையை வாழ்த்தி வணங்குகின்றேன்.


### துணைநூற் பாட்டியல்

### கலைஞரின் நூல்கள்

1. ஒரே ரத்தம் - Oru Ratham - 1987, Tamil Language Drama film, directed by K. Sornam, written by M.K.Kalainar karunnanithi – 1980.
2. கலைஞரின் கவிதைகள் – பாரதி பதிப்பகம் மு.ப: 1977
3. கவிதை மழை- பாரதி பதிப்பகம் மு.ப: 2021
4. குறளோவிம் - திராவிடன் பதிப்பகம் , 1998.
5. தென்பாண்டிச்சிங்கம் - திருமகள் நிலையம், பதிப்பு 12 :1918
6. புதையல் - பாரதி பதிப்பகம் மு.ப: 1998.

### இதழ்களில்

7. பூம்புகார் -முரசொலி மலர்களில் வெளிவந்த தொடர்.

8. மாணவநேசன் - குடியரசு:22-7-1944 பக் :6 (பார்த்த நாள் 12.5. 2018

9. நெஞ்சுக்கு நீதி – முதல் பாகம் 1924-1969 தினமணி; கதிர் இதழில் தொடராக வெளிவந்தது.

10. நெஞ்சுக்கு நீதி – இரண்டாம் பாகம் 1969-1976 குங்குமம் இதழில் தொடராக வெளிவந்தது.

11. நெஞ்சுக்கு நீதி – ஐந்தாம் பாகம் 1996-1999 வெளியீட்டவிழா சென்னை அண்ணா அறிவாலயம் கலைஙர் ரங்கம் ஜீன் -2: 2013.

**இணையதளம்**

12. www.keetru.com

13. www.klaignar.dmk.in

14. www.ta.m.wikipedia.org

15. www.vikatan.com